**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று சென்னைப் பல்கலைக்கழக 150வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.**
**4/9/2006**

கவிப்பேரரசு வைரமுத்து எழுதியுள்ள பல்கலைக் கழகம் பற்றிய பாடலில் "சென்னைப் பல்கலைக் கழகமே, எங்கள் அன்னைப் பல்கலைக் கழகமே" என்று போற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார். அன்னைப் பல்கலைக் கழகமே என்று நான் சொல்ல இயலாது, காரணம், நம்முடைய நண்பர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டதைப் போல, ஆறாண்டு காலம் இங்கே இந்தப் பல்கலைக் கழகத்திலே பயின்றேன் என்று சொல்லிக் கொண்டதைப் போல, பயின்றேன் என்று சொல்லக் கூட முடியாது, பல்கலைக் கழகத்தில் நுழைந்தேன் என்று சொல்லிக் கொள்ள இயலாத நான், சென்னைப் பல்கலைக் கழகமே, என் அன்னைப் பல்கலைக் கழகமே என்று வைரமுத்து வர்ணிப்பதில் எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும் உணர்வும் சொல்ல முடியாததாகும். ஏனென்றால் அன்னை என்று அழைக்கும்போது, பல்கலைக் கழகத்தையே ஒரு அன்னை என்று அழைக்கும்போது, பல கல்லூரிகளுக்கு, பல தொடர்புடைய கல்வி நிலையங்களுக்கெல்லாம் பல்கலைக் கழகம் அன்னையாக விளங்குவதை அவர் குறிப்பிட்டது மாத்திர மல்ல, இது கல்விப் பாலை, அறிவுப் பாலை, ஆக்கப் பாலை, முயற்சிப் பாலை, நாட்டை உருவாக்குகின்ற உத்வேகப் பாலை இளைஞர்களுக்கு, மாணவர் களுக்கு ஊட்டுகின்ற தாயாக, அன்னையாக இது விளங்குகிறது என்பதற் காகத் தான் அன்னைப் பல்கலைக் கழகம் என்று தம்பி வைரமுத்து குறிப்பிட் டாரென்று கருதுகின்றேன்.

அன்னை என்றால் அறிவு, ஆற்றல், அடக்கமுடைமை, அன்புடைமை, அறநெறி, தயவு, தாட்சண்யம், தாய்மை, பண்பாடு, பரந்த மனப்பான்மை, பாசம், நேசம், பற்று இவை அனைத்தையும் விட நாகரீகம் இவ்வளவும்

பெற்றவர் தான் அன்னையாக (கைதட்டல்) இருக்க முடியும். எனவே இந்தப் பல்கலைக் கழகம் அன்னையாக இருக்கத் தகுதியுடைய பல்கலைக் கழகம் தான் என்பதை இந்தப் பாட்டு வரிகள் நமக்கு எடுத்துக்காட்டிக் கொண்டிருக் கின்றன. இத்தகைய பல்கலைக் கழகத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் நம்முடைய குடியரசு தலைவர் அவர்கள் கலந்து கொள்வதும், அவர்கள் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சியிலே நாமெல்லாம் கலந்து கொள் வதும் நமக்குக் கிடைத்த பெரும்பேறு, அரும் வாய்ப்பு என்றே சொல்லலாம்.

அவர்கள் குடியரசு தலைவராக ஆற்றி வருகின்ற பணி எத்தகையது என்றால், ஒரேயொரு சான்றின் மூலமாக விளக்க வேண்டுமேயானால், ஒரு விழாவிற்கு வருகிறார் என்றால், அந்த விழாவிற்கு நேரடியாக மேடையிலே வந்து எங்களைப் போல அமர்ந்து விடுகிறவர் அல்ல அவர். இங்கே கூட இந்த விழாவிற்கு வந்த போது எந்த மண்டபத்தை அவர் இன்றைக்கு தொடங்கி வைக்கிறாரோ, எது பழுது பார்க்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டிருக் கிறது என்று அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அதை முன்கூட்டிச் சென்று பார்த்து விட்டுத் தான், சரியாகச் செய்திருக்கிறார்களா என்று பார்த்து விட்டுத் தான், அதற்குப் பிறகு அதைப் பாராட்ட வந்திருக்கிறார். (கைதட்டல்)

நமக்கெல்லாம் விழா என்றால் போதும், மாலை என்றால் போதும், மேடை என்றால் போதும், ஒலி பெருக்கி என்றால் போதும், அவர் அப்படி அல்ல, அத்தகைய குடியரசு தலைவர் அல்ல அவர், உள்ளபடியே குடியரசு தலைவராக அவர் இன்றைக்கு (பலத்த கைதட்டல்) நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அத்தகையவருடைய அருமையான முன்னிலையில் இந்த இனிய விழா நடைபெறுவது. அதிலே நாமெல்லாம் கலந்து கொள்வது நமக்கு வாய்த்த பெருமை, பேறு என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150வது ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்றோம்

நாமெல்லாம். பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா 1957ஆம் ஆண்டு நடைபெற்ற போது, அன்றைய பிரதமர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களும், அன்றைய குடியரசு துணைத் தலைவர், தத்துவ மேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டு அன்றைய விழாவினைச் சிறப்பித்திருக்கிறார்கள்.

150வது ஆண்டு தொடக்க விழா கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில் நமது மதிப்பு மிகுந்த மேதகு குடியரசு தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் வருகை நல்கி, செனட் இல்லத்தினைத் திறந்து வைப்பது உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. அது போலவே நம்முடைய மதிப்பிற்குரிய மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும், மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள், மத்தியத் திட்டக் குழு உறுப்பினர், மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர், பல்கலைக் கழக நல்கைக் குழு துணைத் தலைவர், முன்னாள், இந்நாள் துணை வேந்தர்கள், பேராசிரியப் பெருமக்கள், மத்திய மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள், கல்வியாளர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள், மாணவ மாணவியர் முதலான பலரும் ஒருங்கே வருகை தந்து இந்த விழாவினைச் சிறப்பித்திருப்பது கண்டு மிக்கப் பெருமை கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகம் உலக அளவில் புகழ் பெற்ற உயர்ந்த உன்னதமான பல்கலைக் கழகம். 150 ஆண்டு கால வரலாற்றில் அறிவும், ஆற்றலும், பண்பாட்டுச் செறிவும், சீர்மையும் நிறைந்த ஏறத்தாழ மூன்று கோடி இளைஞர்களை உருவாக்கி உலகுக்கு அளித்துள்ள ஓர் அரியப் பல்கலைக் கழகமாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் வார்ப்புகளாக வடிவெடுத்து, வையம் புகழும் பெருமைகளைக் குவித்துள்ள பெரு மக்களையும், அவர்களை உருவாக்கிட

**தம்முடைய உழைப்பினை ஈந்த துணை வேந்தர்கள், பேராசிரியப் பெருமக்கள் அனைவரையும் இவ்வேளையில் நினைவுகூர்ந்து போற்றுகிறேன், பாராட்டு கிறேன்.**

**1839ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ஆம் நாளன்று, அன்றைய சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்து லார்டு ஜான் எல்பின்ஸ்டோன் அவர்களிடம், வழக்கறிஞர் ஜார்ஜ் நார்ட்டன் என்பார், அப்போதைய சென்னை வாழ் மக்கள் ஏறத்தாழ 70 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட விண்ணப்பம் ஒன்றினை வழங்கினார். அந்த விண்ணப்பத்தில் நாடு முழுமைக்கும் கல்வி முறை ஒன்றை சென்னை மாகாணத்தில்** (Composite State of Madras) **செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தது. அந்நாளில் ஆங்கிலேய இயக்குநர் குழுவின் தலைவராக இருந்த சார்லஸ் உட் என்பார், அந்தக் கோரிக்கை அடிப்படையில் ஆய்வு செய்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்விக் கொள்கை ஒன்றை அப்போது வெளியிட்டார்.**

**அந்தக் கொள்கை அறிக்கையில்,**

1. **ஆங்கிலக் கல்வியின் பயன்களை இந்திய மக்கள் பெறுமாறு செய்ய வேண்டும்.**
2. **இந்தியர்களது அறிவுத் திறன், ஒழுக்கம் ஆகியவற்றை உயர்த்தி, நேர்மையுள்ள அரசு அலுவலர்களாக அவர்களை மாற்ற வேண்டும்.**
3. **இந்திய மொழிகளை ஆங்கில மொழியுடன் சேர்த்துக் கற்பித் தலுக்குப் பயன்படுத்த வேண்டும். இந்திய மொழிகள் புறக் கணிக்கப்படக் கூடாது.**
4. **உயர் கல்வி நிலையில் இந்தியப் பண்பாட்டுத் துறைப் பாடங் களைக் கற்க மாணவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.**
5. **இந்திய மாநிலங்களில் கல்வித் துறைகள் நிறுவப்பட்டு, மேற் பார்வைக்கு பொதுக் கல்வி இயக்குநர்கள்** (Director or Public Instructions) **நியமிக்கப்பட வேண்டும்.**

6. கல்கத்தா, பம்பாய் சென்னை போன்ற முக்கிய நகரங்களில் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் அந்த விண்ணப்பத்திலே கூறப்பட்டிருந்தன. அந்தப் பரிந்துரைகளின் பயனாகத் தான், இந்தியத் திருநாட்டில் 1857ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்று சொல்லப்படுகிறதே, அந்தச் சிப்பாய் கலகத்தின் போது நாடு முழுவதும் நாட்டு விடுதலைக்கான எழுச்சி ஏற்பட்ட அதே ஆண்டில், சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் 24–1–1857 அன்று முதல் பல்கலைக் கழகமாக இந்தியாவிலே கல்கத்தா பல்கலைக் கழகமும், பின்னர் 18–7–1857 அன்று இரண்டாவது பல்கலைக் கழகமாக பம்பாய் பல்கலைக் கழகமும், பின்பு 5–9–1857 அன்று மூன்றாவது பல்கலைக் கழகமாக நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகமும் (University of Madras) என மூன்று பல்கலைக் கழகங்கள் தொடங்கப்பட்டன.

இங்கே பேசிய சிலர் குறிப்பிட்டதைப் போல இங்கிலாந்து நாட்டில் அமைந்துள்ள இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்னோடியாகக் கொண்டு நிறுவப்பட்ட பல்கலைக் கழகம் தான் சென்னைப் பல்கலைக் கழகமாகும். அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லவேண்டுமேயானால் இந்தப் பல்கலைக் கழகத்தின் வளாகம் அமைந்துள்ள இடம் சேப்பாக்கம். என்னுடைய தொகுதி. (பலத்த கைதட்டல்) உங்களுக்கு ஒரு முதல் அமைச்சரைத் தந்த தொகுதி சேப்பாக்கம். இந்தச் சேப்பாக்கத்தில் தான் இந்தப் பல்கலைக் கழகமும் அமைந்திருக்கின்றது. அது பல்கலைக் கழகத்திற்கு உள்ள பெருமையல்ல, எனக்குள்ள பெருமை என்று சொல்லிக் கொள்கிறேன். (கைதட்டல்)

இங்கே நம்முடைய துணை வேந்தர் குறிப்பிட்டதைப் போல், தமிழ்நாடு சட்டப் பேரவையில் 22.7.2006 அன்று வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில்

“சென்னைப் பல்கலைக் கழகத்தின் 150வது ஆண்டு விழா நடைபெறவிருப்பதை யொட்டி, சென்னைப் பல்கலைக் கழக வளாகத்திலேயே திராவிட இயக்க ஆய்வு மையம் (Centre for Research on Dravidian Movement) ஒன்றினை நிறுவிட இந்த அரசு முடிவெடுத்துள்ளது” என்று அறிவிக்கப்பட்டது

அந்த திராவிட இயக்க ஆய்வு மையம் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை எண்ணும்பொழுது தமிழகத்தில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலவிய அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலைகளையும், அவற்றின் விளைவாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சந்தித்த பிரச்சினைகளையும் இன்னமும் நாம் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில ஆதிக்க சக்திகளால் மற்றவர்கள் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் உத்தியோகத் துறையிலே புறக்கணிக்கப்பட்டனர். கல்வித் துறையிலே புறக்கணிக்கப் பட்டார்கள். தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் மனம் புழுங்கிக் கிடந்தனர். அந்த நிலைமை கண்டு பொங்கி எழுந்தவர்களில் ஒருவர் தான் இந்தப் பகுதியிலே, சேப்பாக்கம் பகுதியிலே அன்றைக்குப் பிறந்து வளர்ந்த டாக்டர் நடேசனார், அவருக்கு உற்றத் தோழராக பிட்டி தியாகராயர், அவர்களுக்கு துணையாக டாக்டர் டி.எம். நாயர் – இந்த மூவரும் கூடிப் பேசி இங்கே தான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வி வளர்ச்சியைக் கருதி 1912ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மெட்ராஸ் யுனைடெட் லீக் (Madras United League) என்னும் அமைப்பை நிறுவி 1913

ஆம் ஆண்டு அதற்கு திராவிடர் சங்கம் (Dravidian Association) எனப் பெயரையும் மாற்றினார்கள்.

அந்த சங்கம்தான், 1916ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 20ஆம் நாள் அன்று தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்னும் புதிய அரசியல் கட்சியாக உருவெடுத்தது. பின்னர் நீதிக் கட்சி என வரலாற்றில் நின்று நிலைத்துவிட்டு, அதன் பின்னர் தென்னிந்திய நல உரிமைச் சங்கமாக பெயர் மாற்றம் பெற்று, பிட்டி. தியாகராயர் அவர்கள் நீதிக் கட்சியின் கொள்கையையும், குறிக்கோளையும் அறிவிக்கும் ஆதிக்க இனங்கள் எது என்பதையும் தன்னுடைய இனம் தாழ்த்தப்பட்டிருக்கிறது என்பதையும், அந்த இனம் தாழ்த்தப்பட்டிருந்தாலும் மறுபடியும் தடைகளை உடைத்துக் கொண்டு, முன்னேற முடியுமென்ற தன்னம்பிக்கையையும் 1916இல் அறிவித்தார். இதைப் பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார்: இது முரசொலி மாறன் எழுதிய "திராவிட இயக்க வரலாறு" எனும் நூலில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. எனவே 1916ஆம் ஆண்டு தமிழக வரலாற்றில் ஒரு முக்கியமான ஆண்டு.

திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய டாக்டர் டி.எம். நாயர் அவர்கள் ஏழை, எளிய நலிந்த சமுதாயத்தினர் குறிப்பாக மாணவர்கள், அரசு ஊழியர்கள் துணிவு பெற வேண்டுமென்றும், தங்கள் குறைபாடுகளைத் தைரியத்துடன் எடுத்து வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி,

"விழியுங்கள், எழுங்கள், இன்றேல்

என்றும் நீவீர் வீழ்ந்து பட்டோராவீர்" என்ற இந்த மூன்று "ஸ்லோகங்" களை அன்றைக்குச் சொன்னார்.

"Awake, arise or be forever fallen"

என்று எழுச்சியுடன் டாக்டர் நாயர் உரையாற்றினார். அது தான் திராவிட இயக்க சரித்திரத்தின் முன்னோடி சிறப்புப் பாயிரம். அத்தகைய எழுச்சிமிக்க

உரைகள், செய்தி ஏடுகள், இடைவிடாத கருத்து விளக்கங்கள் போன்றவற்றின் பயனாக, ஜஸ்டிஸ் கட்சி 1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று முதல் மந்திரி சபையை அமைத்தது. தியாகராயரின் ஆலோசனையின்படி, சுப்பராயலு ரெட்டியார் முதலமைச்சரானார்.

1923ஆம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது பொதுத் தேர்தலிலும் நீதிக் கட்சியே வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. 1923 ஆம் ஆண்டில் நீதிக்கட்சி அரசு நடைபெற்ற போது, சென்னைப் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டம் (Madras University Act,1923) இயற்றப்பட்டு, அது தான் இன்றளவும் உறுதி வாய்ந்த சட்டமாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தின் மூலம்தான் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பெறுவதற்கும், ஆசிரியர்களாக நியமனங்கள் பெறுவதற்கும் அதற்குப் பிறகு தான் வழி யே பிறந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதன்பின், 1926 ஆம் ஆண்டில் டாக்டர் சுப்பராயன் தலைமையில் அமைந்த மந்திரி சபையில் இடம் பெற்றிருந்த முத்தையா முதலியார் அவர்களால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (Communal G.O.) என்ற சட்டத்தைக் கொண்டு வந்த நேரத்தில் அதன் வாயிலாக பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட இளைஞர்கள் பெரும் வாய்ப்புகளை வேலை வாய்ப்பிலும், கல்வியிலும் பெற்றார்கள். ஆனால் இதை நீண்ட நாள் அனுபவிக்க முடியவில்லை. இன்றைக்கு விவாதிக்கப்படுகின்ற மத்திய அரசு கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இடஒதுக்கீடு தொடர்பான சட்டமுன்வடிவு பற்றி விவாதிக்கிறோமே, இது அன்றைக்கு கம்யூனல் ஜி.ஓ. என்ற பெயரால் உருவாக்கப்பட்ட சட்டத்தின் தாக்கமாகும்.

நாடு சுதந்திரம் அடைந்த பின், 1950 ஆம் ஆண்டு பண்டித நேரு அவர்கள் பிரதமராக இருந்த காலக் கட்டத்தில் இந்திய அரசியல் அமைப்புச்

சட்டம் நடைமுறைக்கு வந்த போது வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டத்திற்கு ஒரு ஆபத்து ஏற்பட்டது.

அந்தச் சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் விதிகளுக்கு, மாறாக, முரணாக இருப்பதாக ஆதிக்கக்காரர்களால் உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு, அந்த வழக்கில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் பெற்று வந்த அத்தனை சலுகைகளும் பறிக்கப்பட்டன.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து தமிழகம் முழுவதும் 1950 முதல் பெரும் போராட்டம் வெடித்தது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கர்ம வீரர் காமராஜர் அத்தனை பேரும் அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தார்கள். அது கண்டு. இந்தியப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் காமராஜரை டெல்லிக்கு அழைத்து அவரோடு பேசி தமிழகத்தின் நிலையை உணர்ந்து இந்திய அரசியல் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டு வந்தார். அந்தத் திருத்தத்தின்படி தான் இனிமேல் மாணவர்களானாலும், வேலை வாய்ப்புக்குச் செல்பவர்களானாலும் அவர்கள் எல்லாம் socially and educationally backward ஆக இருந்தால், அவர்களுக்கு ரிசர்வேஷன் உண்டு என்ற ஒரு கொள்கை அன்றைக்குத் தான் கடைப்பிடிக்கப்பட்டது. இது இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு பகுதியிலே தமிழகத்திலே நடைபெற்ற பெரும் கிளர்ச்சியின் காரணமாக ஒரு இடத்தில் வட பகுதியிலே டெல்லியிலே மின்னிய மின்னல், அந்த மின்னல் இந்த ஐம்பதாண்டு காலத்திற்குப் பின்பு இந்தியா முழுமையும் ஒளி மயமாக ஆக வேண்டும் என்பது தான், இந்தியா முழுமையும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆக வேண்டும் என்பது தான் அன்றைக்கு இங்கே உருவான திராவிட இயக்கத்தினுடைய அந்தக் கொள்கை, அந்த இலட்சியம், அந்தக் குறிக்கோள். அதை நிறைவேற்றுவதற்கு உரியவர்கள் இங்கே

அமர்ந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்கள் இந்தக் கொள்கையிலே எவ்வளவு அழுத்தமான நம்பிக்கை உடையவர் என்பதை நான் அறிவேன். (கைதட்டல்) பாரதத்திலே போரிலே விடாப்பிடியாக நின்று ஜெயித்தவன் அர்ஜுனன் என்று படித்திருக்கிறோம். (கைதட்டல்) எனவே இந்த அர்ஜுனரும் இந்தப் போரிலே நிச்சயமாக வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கின்றது. அந்த அர்ஜுனருக்கு கண்ணன் எப்படி உதவியாக இருந்தானோ அதைப் போல நாமும் உதவியாக இருப்போம் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்து இந்த இனிய விழாவிலே நம்முடைய குடியரசு தலைவர் அவர்களும் மற்ற பெருமக்களும் கலந்து கொண்டமைக்காக தமிழகத்தின் முதல் அமைச்சர் என்ற முறையில் நன்றியும் பாராட்டும் வாழ்த்தும் கூறி இந்த அளவில் என் உரையை நிறைவுசெய்கிறேன்.